*செ.வெ.எண்: 57/2021* *நாள்: 27.08.2021*

**75-வது சுதந்திர தினத்தை கொண்டாடும் விதமாக மத்திய ரிசர்வ் காவல் படை சைக்கிள் பேரனியை திருப்பூர் மாவட்டத்திலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.**

திருப்பூர் மாவட்டம், ஜெய்ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில், 75-வது சுதந்திர தினத்தை கொண்டாடும் விதமாக மத்திய ரிசர்வ் காவல்படை சைக்கிள் பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் இன்று ( 27.08.2021) துவக்கி வைத்தார்.

75-வது சுதந்திர தினத்தை கொண்டாடும் விதமாக மத்திய ரிசர்வ் காவல்படை மூலம் கன்னியாகுமரியிலிருந்து டெல்லி ராஜ் காட் காந்தியடிகளின் நினைவு இடம் வரை 2700 கி.மீ சைக்கிள் பேரணி நடைபெற்று வருகிறது. இப்பேரணியானது கன்னியாகுமரியிலிருந்து 400 கி.மீ கடந்து திருப்பூர் மாவட்டத்தை (26.08.2021) அன்று மாலை வந்தடைந்தது. இன்று (27.08.2021) காலை திருப்பூர் மாவட்டம் ஜெய்ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியிலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மத்திய ரிசர்வ் காவல்படை வீரர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்து திருப்பூர் மாவட்டத்திலிருந்து சைக்கிள் பேரணி துவக்கி வைத்தார்கள்.

மத்திய ரிசர்வ் காவல்படை வீரர்கள் சைக்கிள் பேரணியானது, திருப்பூர் சுதந்திர போராட்ட தியாகி திருப்பூர் குமரன் அவர்கள் நினைவு மண்டபத்தில் திருப்பூர் குமரன் திருவுருவ சிலைக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி பின்னர் கோயமுத்தூர் மாவட்டத்திற்கு சென்றனர்.

இந்நிகழ்ச்சியில், மத்திய ரிசர்வ் காவல் படை உதவி ஆணையர் திரு.பயாஸ், மருத்துவ அலுவலர் திரு.பாலு மற்றும் மத்திய ரிசர்வ் படை வீரர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**